
# ஷேக்ஸ்பியரும் வேதாத்திரியமும்





அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்

## இதனுள்ளே

1. ஷேக்ஸ்பியரும் வேதாத்திரியமும் ஒப்பாய்வு
2. கடன் கடன் கடன்
3. புகழ் புகழ் புகழ்
4. பேச்சு பேச்சு பேச்சு
5. துன்பங்கள் துன்பங்கள் துன்பங்கள்
6. எண்ணம் எண்ணம் எண்ணம்
7. அன்பு அன்பு அன்பு
8. நட்பு நட்பு நட்பு
9. நல்லோர் நட்பு எப்படி இருக்கும் ?
10. கருணை கருணை கருணை
11. அரசியல்வாதி
12. இன்பம் துன்பம்
13. நேர்மை நேர்மை நேர்மை
14. நல்லோர் பண்பு நல்லோர் பண்பு
15. செல்வம் செல்வம் செல்வம்
16. வெறுப்பு வெறுப்பு வெறுப்பு
17. வறுமை வறுமை வறுமை
18. மனவளம் மனவளம் மனவளம்
19. ஒழுங்கு ஒழுங்கு ஒழுங்கு
20. நோக்கம் நோக்கம் நோக்கம்
21. மாயை மாயை மாயை
22. பேராசை பேராசை பேராசை
23. பெண்மை பெண்மை பெண்மை
24. வஞ்சம் வஞ்சம் வஞ்சம்
25. திசை காட்டும் வேதாத்திரியம்

உலகம் உய்ய அவ்வப்போது சிந்தனையாளர்கள், சான்றோர்கள் தத்துவஞானிகள், மகான்கள் தோன்றி வழிகாட்டி வந்துள்ளனர்.

மேற்கிலும் கிழக்கிலும் எத்தனையோ சிந்தனையாளர்களை தத்துவஞானிகைள மானுடம் கண்டுள்ளது.

அந்த வரிசையில் வந்த சிந்தனையாளர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் ஆங்கில நாடக ஆசிரியர் ஷேக்ஸ்பியரும் அருள்தந்தை தத்துவஞானி வேதாத்திரி மகரிஷியும் ஆவார்கள்.

உலக உணர்வுக்கு வழிகாட்ட வந்தோரில் அறிவியல் கற்ற விஞானஞானிகள் உளர். மெய்யியல் கற்ற மெய்ஞ்ஞானிக்ள உளர்.

சமயச் சான்றோர்கள் உளர். அரசயில் அறிஞர் உளர். இலக்கியச் செல்வர் உளர். பொருளாதார மேதைகள் உளர்.

சிந்தனையார்கள் உளர். அவரவரும் அவரவர் வழியல் கருத்துச் செல்வங்களை தத்துவச் செல்வங்களை வழங்கிவிட்டுச் சென்றுள்ளனர்

இந்த வரிசையில் ஷேக்ஸ்பியரும் வேதாத்திரி மகரிஷியும் மாறுபட்டுத் திகழ்கிறார்கள்.

## ஷேக்ஸ்பிரும் வேதாத்திரியமும் – ஒரு பார்வை

- தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் தலைசிறந்த இருபெரும் படைப்பாளிகளின் படைப்பிலக்கியங்களின் அலசல் பார்வை கொண்ட ஒப்பாய்வு நூல் இது.
- வில்லியம் ஷேக்ஸ்பியர் இங்கிலாந்து நாட்டில் பிறந்தவர். ஆங்கில மொழியின் மிகப் பெரிய எழுத்தாளர். வேதாத்திரி மகரிஷி இந்தியாவில் அவதரித்தவர். ஆன்மீக எழுத்தாளர், கவிஞர், சிந்தனையாளர், தத்துவவாதி.
- வில்லியம் ஷேக்ஸ்பியர் உலகின் மிகப் பெரிய நாடக ஆசிரியர். இங்கிலாந்தின் தேசியக் கவிஞர். வேதாத்திரி மகரிஷி ஆன்மீகத்தை அறிவியல் நோக்கில் மானுடத்தை அழைத்துச் சென்றவர். மக்களின் தத்துவஞானி.
- வில்லியம் ஷேக்ஸ்பியர் 17 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். வேதாத்திரி மகரிஷி 20 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்
- வில்லியம் ஷேக்ஸ்பியர் இவ்வுலகில் வாழ்ந்த காலம், 26.04.1564 – 23.04.1616. வேதாத்திரி மகரிஷி நிலவுலகில் நிலவிய காலம் 14.8.1911 – 28.03.2006.

- வில்லியம் ஷேக்ஸ்பியரும் வேதாத்திரி மகரிஷியும் கவிஞர்கள் வரிசையில் வருபவர்கள்.
- வில்லியம் ஷேக்ஸ்பியரும் மகரிஷியும் நாடக ஆசிரியர்கள் வரிசையிலும் வருபவர்கள்.
- இருவரும் பிறவி எழுத்தாளர்கள். இருவரின் எழுத்துக்களிலும் சொல் புதிது, பொருள் புதிது. புரிந்து கொள்வதும் எளிது.
- ஷேக்ஸ்பியரும் மகரிஷியும் சமுதாய சீர்திருத்தவாதிகள்
- ஷேக்ஸ்பியரின் நாடகங்கள் அவர் வாழ்ந்த காலம் தொடங்கி இன்றுவரை மக்கள் நாடகமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. எத்தனை நவீன, பின் நவீன நாடகங்கள் வந்தாலும் ஷேக்ஸ்பியர் நாடகங்களின் மீதான வரவேற்பு குறைவதில்லை.
- வேதாத்திரி மகரிஷி 70 க்கும் மேற்பட்ட நூல்களையும், 2000 க்கும் மேற்பட்ட கவிதைகளையும் மானுடத்திற்கு தந்துள்ளார்.
- ஆங்கில மொழியின் மிகப்பெரும் எழுத்தாளர் என்றும் உலகின் மிகப் புகழ்வாய்ந்த நாடக ஆசிரியர் என்றும் ஷேக்ஸ்பியர் குறிப்பிடப்படுகிறார். உலகின் பாமர மக்களின் தத்துவஞானி என்று வேதாத்திரியார் அழைக்கப்படுகிறார்.
- அநேக சந்தர்ப்பங்களில் இங்கிலாந்தின் தேசியக் கவிஞர் என்றும் ஷேக்ஸ்பியர் அழைக்கப்படுகிறார்.
- வாழும் ஷேக்ஸ்பியர் படைப்புகளில் 38 நாடகங்கள், 154 செய்யுள் வரிசைகள், இரண்டு நெடும் விவரிப்பு கவிதைகள், மற்றும் பல பிற கவிதைகள் அடங்கும். அவரது நாடகங்கள் உலகில் ஒவ்வொரு பெரிய மொழியிலும் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது..
- வேதாத்திரி மகரிஷி 2000 க்கும் மேற்பட்ட கவிதைகளையும் 80 க்கும் மேற்பட்ட நூல்களைத் தந்துள்ளார்.
- ஷேக்ஸ்பியரும் மகரிஷியும் பன்முக ஞானம் படைத்தவர்கள்.
- பல செய்திகளை ஷேக்ஸ்பியர் முன்மொழிகிறார். மகரிஷி அறிவியல் கண்ணோட்டத்துடன் அவைகளை வழி மொழிகின்றார்.

- மொழி வளம், கற்பனை நயம், சமூகப் பார்வை, பிரக்ஞையுடன் கூடிய சீற்றம் எல்லாம் இணைந்து–இணக்கமாகி, இவர்களை ஓர் இணையற்ற எழுத்தாளர்களாக ஆக்கியிருக்கின்றன.
- எளிய சொற்களால் எழுச்சியூட்டும் இவர்களது கவிதை வரிகளில்  மொழி வளர்ச்சிக்கும், சமுதாய மேம்பாட்டிற்கும், உலக சமாதானத்திற்குமான உரத்த சிந்தனைகள் தெரிகின்றன.
- ஷேக்ஸ்பியரும் மகரிஷியும், தம் படைப்புக் கைகளால் இந்த தரணியைத் தட்டி எழுப்புவதைத் தலையாயக் கடமையாய் கொண்டிருந்தனர்.
- ஷேக்ஸ்பியரும் மகரிஷியும், பிற்போக்குச் சக்திகளின் பிடரியைப் பிடித்து உலுக்கி, முற்போக்குக் கருத்துகளை முன் வைப்பவர்கள்.
- ஷேக்ஸ்பியரும் மகரிஷியும், துருப்பிடித்த வார்த்தைகளைத் தூரத் தள்ளி, சுறுசுறுப்புச் சொற்களுக்குச் சூடேற்றியவர்கள்!
- இவர்களது எழுத்துக்களில் நிறுத்தக் குறிகள் கூட நெருப்புத் திரிகள். இவர்கள் கவிதைகள், சொற்களில் வடித்த சுடுசோறு, சமுதாயம் பசியாறும்.
- இங்கிலாந்து நாடக ஆசிரியன், தன் எழுதுகோலில் விட்டுவைத்த மையின் மிச்சத்தை, மகரிஷி தன் எழுதுகோலில் நிரப்பிக் கொண்டு முடித்து வைத்தார்.
- ஒரு யுக விழிப்பை ஏற்படுத்துவதே இவர்களது இருவரது இலக்காக இருந்திருக்கிறது. – அந்த முயற்சியிலே இவர்களுக்கு வெற்றியும் கிடைத்தது.
- ஸ்ட்ராட்ஃபோர்டு–அபான்–அவான் என்கிற இடத்தில் தான் ஷேக்ஸ்பியர்யர் பிறந்தார், வளர்ந்தார். 18 வயதில், அவர் ஆனி ஹதாவேயை திருமணம் செய்து கொண்டார். வேதாத்திரி மகரிஷி இந்தியாவில் தமிழகத்தில் கூடுவாஞ்சேரியில் அவதரித்தார். லோகம்பாள், லட்சமி என்ற இரண்டு திருமணம் செய்து கொண்டார.
- வேதாத்திரி மகரிஷிக்கு குழுந்தைகள் இல்லை. ஷேக்ஸ்பியருக்கு ஸ்பியர் மூன்று குழந்தைகள்: சுசானா, மற்றும் இரட்டையர்களான ஹேம்னட் மற்றும் ஜூடித்.1585 மற்றும் 1592 ஆம் ஆண்டுகளுக்கு இடையே, லண்டனில் ஒரு நடிகர், எழுத்தாளர் மற்றும் லார்டு சாம்பர்ளின்'ஸ் மென் என்ற நாடக நிறுவனத்தின் பங்குதார் என வெற்றிகரமாகத் தன் வாழ்க்கையைத் துவங்கினார். இந்த நாடக நிறுவனம் பின்னாளில் கிங்'ஸ் மென் நாடக நிறுவனம் என்று ஆனது. 1613 ஆம் ஆண்டு

வாக்கில் அவர் ஸ்ட்ராட்போர்டில் ஓய்வுற்றதாக கருதப்படுகிறது. மூன்று வருடங்களுக்குப் பின் அங்கு அவர் மரணமெய்தினார்..

- ஷேக்ஸ்பியர்யரின் அந்தரங்க வாழ்க்கை குறித்த சில பதிவுகளே பிழைத்திருக்கின்றன. வேதாத்திரி மகரிஷியின் முழு வாழ்க்கையும் மானுடத்தில் உலா வருகிறது
- எத்தனை நவீன, பின் நவீன நாடகங்கள் வந்தாலும் ஷேக்ஸ்பியர் நாடகங்களின் மீதான வரவேற்பு குறைவதில்லை.
- ஒவ்வொரு வருடமும் இங்கிலாந்தின் பல நாடக அரங்குகளிலும் அவருக்காகவே உருவாக்கப்பட்ட லண்டனின் குளோப் அரங்கிலும் (ழுடழடிநெ கூாநயவசந) திரளான கூட்டத்துக்கு இடையே அவரது நாடகங்கள் நிகழ்த்தப்படுகின்றன.
- குறிப்பாக, குளோப் அரங்கின் மேடை நாடக அமைப்பைப் பற்றி தனி கட்டுரை தான் எழுதவேண்டி வரும். ஒன்றைச் சொல்ல வேண்டுமென்றால், குளோப் அரங்கில் நடக்கும் நாடக நடிகர்கள் பார்வையாளர்களையும் கதைக்குள் ஒரு அங்கமாக்கிவிடுவார்கள்.
- பார்வையாளர்கள் ஆக்ரோஷமாகத் தங்கள் கருத்துகளை தெரிவித்தபடி நாடகத்தில் பங்கு பெறுவதை நான் பார்த்திருக்கிறேன். முதல் பத்து நிமிடங்களிலேயே பார்வையாளர்கள் யார் பக்கம் எனத் தெரிந்துவிடும். அந்தளவுக்கு மக்கள் நாடகமாக ஷேக்ஸ்பியர் நாடகங்கள் அமைந்திருக்கின்றன.
- இப்படி இருவேறு வகையான வரவேற்பைப் பெற்ற ஷேக்ஸ்பியர் காவியங்களையும் வேதாத்திரியத்தை எழுதிய ஆசிரியர்களை ஒப்பிடும்போது சிக்கல்கள் பலதும் ஏற்படும். நாடகாசிரியரும், ஆன்மீக கர்த்தாவும் ஒப்பிடக்கூடியவர்களா ?
- வெவ்வேறு மொழியில் எழுதியவர்களை எந்தத் தராசு கொண்டு அளவிடுவது ? வேதாத்திரி மகரிஷி ''அணுவிஷம்'' என்ற ஒரே நாடத்தைப் படைத்துள்ளார்.
- கால வித்தியாசங்களைக் கருத்தில் கொள்ளாது பாத்திரங்களின் உணர்ச்சி நிலை, நெடும் பண்பாட்டு உரையாடலில் அவ்வுணர்ச்சிகளின் இடம், இயற்கை விவரணைகள், நாடகத்தின் உச்சகட்ட தருணங்கள் என காவிய அழகைக்கொடுக்கும் ரசனையை மட்டும் ஒப்பிடுகிறோம்.

- ஷேக்ஸ்பியர் காட்டும் உண்மைகள் மானுடம் தழுவிய உண்மைகளாக அமைந்திருக்கின்றன. கால தேச வர்த்தமானங்களைக் கடந்து ஷேக்ஸ்பியர் மற்றும் வேதாத்திரி மகரிஷியின் இரு மகா படைப்பாளிகளை ஒப்பிட்டுப் பார்க்கும் அளவுகோலாகவும் கச்சிதமாக அமைந்து விடுகின்றது.
- முதலில் நூல் தோற்றம் குறித்த ஒப்பீட்டில் ஷேக்ஸ்பியரும் வேதாத்திரி மகரிஷியும் தங்கள் மூதாதைகள் காட்டிய வழியைப் பின்தொடர்வதில் ஒற்றுமை கிட்டுகிறது.
- சங்க இலக்கியங்களிலிருந்தும், திருமந்திரம், திருவருட்பா, தாயுமானவர் பாடல்களிலிருந்தும் சந்தங்களின் ரசனைக்குப் பல பாடல்களையும் வைணவப் பாடல்களையும் நிழலெனத் தொடர்ந்திருக்கிறார் வேதாத்திரி மகரிஷி.
- கிரேக்க மற்றும் ரோமானியக் காவியங்கள் மற்றும் இங்கிலாந்து நாட்டின் பழங்கதைகளிலிருந்து தனது நாடகங்களுக்கான பாத்திரங்களையும், கருக்களையும் தொடர்ந்த ஷேக்ஸ்பியர் வேதாத்திரியத்தைப் போல பல புதிய சொல்லாட்சிகளை உருவாக்கியுள்ளார்.
- எளிமை, இனிமை, இயல்பான உரையாடல்கள், மக்கள் தங்கள் அன்றாட வாழ்வில் எதிர்கொள்ளும் பிரச்சனைகள், எல்லாவற்றையும் ஷேக்ஸ்பியரின் பாத்திரங்கள் இயல்பான நகைச்சுவை உணர்வோடு அலசி ஆராய்வதாக அமைந்திருக்கின்றன.
- இது மக்களிடம் நேரடியாக உரையாடியது. கலகத்தை உண்டு செய்தது. கோபத்தையும் கண்ணீரையும் வரவழைத்தது. மக்கள் தங்களில் ஒருவராக பாத்திரங்களோடு பயணம் செய்தனர்.
- இதற்கு நேர்மாறாக, வேதாத்திரியத்தியம் அதீதங்களின் ருசியை படிப்பவருக்கு அளிக்கவல்லது. அன்றாட வாழ்வின் ரசனைக்கு இடம் கொடுத்தாலும், ஆன்மீக உணர்ச்சிகள் மிகைப்படுத்தப்பட்டுள்ளன.
- ஆன்மீகத்தின் பிரம்மாண்டமும், உவமை அணியும் அதிகமாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளதால் படிப்பவரின் முயற்சி மூலம் வேதாத்திரியத்தை எட்டிப்பிடித்து தொடரும் நிலையில் மகரிஷியின் கவிதைகள் உள்ளன.
- ஷேக்ஸ்பியரின் சானெட்டுகள் போல இறங்கி மக்களுக்கு அருகே வருகிறது வேதாத்திரியம்.

- ஷேக்ஸ்பியரின் நாடகம் என்பதால் அதன் உணர்ச்சிகள் அதீதமாக இருந்தாலும், மக்களிடம் கடத்தும் தன்மையில் அது சமநிலை மாறாமல் இருக்கிறது.
- மிகச் சாதாரணமாக அணிகளைப் பயன்படுத்துகிறார் ஷேக்ஸ்பியர்.
- வாழ்நாள் முழுவதும் தோய்ந்து கிடக்கும்படியான நாடக தருணங்களும், ரசனையும், தத்துவங்களும் அமையும்படி படைப்புகள் ஷேக்ஸ்பியரிடமும் வேதாத்திரியாரிடமும் இருவரிலும் இருக்கின்றன.
- ஷேக்ஸ்பியரின் பாத்திரங்கள் இயல்பான நடையில், உயிர்ப்பாக அமைந்திருக்கும்.
- வேதாத்திரியத்தின், உணர்வுகளும் பிரம்மாண்டமான பின்புலத்தில் அமைந்திருக்கும். மேலோட்டமான பார்வையில் இருவேறு வகையினராகத் தெரிந்தாலும் கவித்திறனிலும் கற்பனைவளத்திலும் இருவரும் ஒப்புநோக்கத் தக்கவர்கள்.
- ஷேக்ஸ்பியர்“ மற்றும் வேதாத்திரியத்தின் ரசனையின் ஒரு துளியைப் பருக நினைப்பவர்கள் கட்டாயம் படிக்க வேண்டிய ஒப்பாய்வு புத்தகம்.

# ஷேக்ஸ்பியரின் தத்துவங்களும் வேதாத்திரிய தத்துவங்களும்.

## கடன் கடன் கடன்

நண்பவீடம் கடன் வாங்குபவர்கள்
நட்பை விற்று விடுகிறார்கள்.” ஷேக்ஸ்பியர்

”கடன் என்பது பெரிய பாரம்” என்கிறது வேதாத்திரியம்.

”உடலினிலே இரத்தஓட்டம் இருக்கு மட்டும்
உண்டாகும் இன்பதுன்ப சுழலில் சிக்கி,
இடர்பட்டு வாழுகின்ற மனிதர் கொண்ட
எத்தனையோ செயற்கைமுறைத் துன்பத் துள்ளே,
கடன்என்ற கற்பனையே பெரும்பா லோர்க்கும்
கவலைதரும் நச்சாகும். அதனால் முன்னே

விடவேண்டும் அனைவருமே இவ்வெண்ணத்தை
விவேகத்தால் ஒன்றுகூடி வாழும் நாளில்.'' (ஞாக.பா.952)

வேதாத்திரியமோ ''கடனின் விளைவு'' பற்றி எச்சரிக்கிறது. (ஞாக.பா.80)

தொடர்ந்துவரும் சமுதாய வாழ்வு என்னும்
உடலினிலே தோற்றமாகி,
படர்ந்துவரும் செல்வநிலை சீர்கேடு
பலமுடைய நீடித்த வியாதி யாகும்.
கடன் என்ற புண்ணாகி,
வட்டிஎனும் சீழ்பிடித்துப் புரையும்ஓடி,
படமுடியா துயராச்சு! பகுத்தறிவும், பொதுஉடைமைக்
கொள்கையுமே இந்நோயுக்கு நல்மருந் தாம்.'' (ஞாக.பா.80)



# புகழ் புகழ் புகழ்

''தண்ணீரில் ஏற்படும் அலைகள்
பெரிதாகி கடைசியில்
மறைந்து விடும். அதுபோல
புகழ் பெருகி கடைசியில்
ஒன்றுமில்லாமல்
மறைந்து விடும்''. – ஷேக்ஸ்பியர்

''மனிதன் எவ்வளவு தெரிந்து கொண்டிருக்கின்றான் என்பதில் புகழ் இல்லை. என்ன நல்ல செயல்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றான் என்பதில்தான் புகழ் இருக்கிறது.

புகழ் என்பது தன்முனைப்புக்குப் போடும் தூபமில்லை. உங்கள் செயலில் நல்வினையால் பயனடையும் மக்கள் உள்ளங்களுக்குக் கொடுக்கும் மதிப்புணர்வே புகழ் ஆகும்.

நீங்கள் புகழைத் தேடுவீர்களானால் உங்களது இந்தப் புகழ் மோகமே உங்களது அந்தப் புகழை விரட்டி அடிக்ககசுடிய சாட்டையாகும்.'' – வேதாத்திரியம்

# பேச்சு பேச்சு பேச்சு

சுருங்கச் சொல்வதே
பேச்சுத்திறனின் உயிர்நாடி. – ஷேக்ஸ்பியர்

''பேச்சு செயல் எண்ணத்தால் பிறர்க்குத் அதுதீங்கிலை யாகில்
ஏச்சில்லை, எவர்க்கும் எப்போதும் இனிதாம்.
பேச்சுக்கும் செயலுக்கும் பிணைபைபின்றி, முரண் செய்யும்
நீச குணடுமுடையோன் நிந்தனைக்கு உள்ளாவான்.'' – வேதாத்திரியம்

# துன்பங்கள் துன்பங்கள் துன்பங்கள்

"துன்பங்கள் வரும்போது
தனியாக வருவதில்லை.
அவை மொத்தமாக வருகின்றன." – ஷேக்ஸ்பியர்

"உடலையே நான் என்று கொள்ளும் மயக்கத்தில் சில பொருட்களும் சில மக்களும் மட்டுமே தனது என்று எண்ணவேண்டி இருக்கும்.

அதன் விளைவாகப் பொருள் உரிமை, மக்கள் உரிமை இரண்டும் எழுந்து இவற்றைக் காக்க சாதி, மொழி, இன, மத தேச அளவில் மனிதர் கூட்டுச் சேரும்போது, சமூகத்தில் வேறுபாட்டு உணர்ச்சிகள் தோன்றித் துன்பங்கள் பெருகின." – வேதாத்திரியம்

# எண்ணம் எண்ணம் எண்ணம்

"நல்லதொன்றும் கெட்டதொன்றும்
எதுவுமில்லை. நாம்
நினைப்பதுதான் அதை
அவ்வண்ணம் ஆக்குகிறது" – ஷேக்ஸ்பியர்

"எண்ணியவெல்லாம் எண்ணியபடியே யாகும். எண்ணத்தால் உறுதியும், ஒழுங்கும் அமைந்திடும்." – வேதாத்திரியம்

# அன்பு அன்பு அன்பு

எல்லோரிடமும் அன்பு
செலுத்துங்கள், சிலரிடம்
நம்பிக்கை வையுங்கள்.
யாருக்கும் தீங்கு செய்யாதீர்கள்" – ஷேக்ஸ்பியர்

"அனைத்துயிரும் ஒன்றென்று அறிந்த அடிப்படையில் ஆற்றும் கடமையெல்லாம் அன்பின் செயலாகும்." – வேதாத்திரியம்

# நட்பு நட்பு நட்பு

''இனிய நண்பா, ஒரு சிறிது நேரம்
உன்னைப் பற்றி நான்
எண்ணினால், என் இழப்புகள்
அனைத்தும் மீட்கப்பட்டு
என் வேதனைகள் தீர்கின்றன.'' – ஷேக்ஸ்பியர்

''நட்பு எந்த அளவுக்கு இருக்கிறதோ அந்த அளவுக்கு வாழ்க்கை ?ல் வெற்றியும் மகிழச்சியும் அதிகரிக்கும்.

மாறாக வெறுப்புணர்ச்சியை மனதில் வைத்துக் கொண்டிருந்தால் அது விரயம் தானே தவிர நன்மை இல்லை.'' – வேதாத்திரியம்

## ''நல்லோர் நட்பு எப்படி இருக்கும் ?

''அறிவறிந்த நிலைஎன்ற மரத்தில் பூத்த,
அகண்டமனப் பான்மையெனும் பூவில் வீசும்,
நெறியுள்ள செயல்களாம் மணமே அன்பு.
நிற்குணமாம் அம்மரத்தில், கருணை என்ற
சிறியபெரிய கனிகள் பழுத்துத் தோன்றும்,
சேர்ந்தோர்க்கும் சிந்திப்பவர்க்கும் கிட்டும்.
தறியாட, நூல்ஓட, ஆடை காணும்''
தனையறிந்தோர் கருத்துணர ஞானம் தோன்றும்.'' – வேதாத்திரியம்

# கருணை கருணை கருணை

கருணைதான் பெருந்தன்மையின் அடையாளம்.'' – ஷேக்ஸ்பியர்

## அன்பும் கருணையும் – வேதாத்திரியம்

நமது உடலை பாதுகாக்கச் செய்யும் செயல் இறைவழிபாடு இல்லையா !. அதுபோல் மற்றவரையும் பாதுகாக்க நாம் செய்யும் செயலும் உதவியும் இறைவழிபாடுதான் என்ற தெளிவையும் பெற வேண்டும். அதற்கு ஏற்படப் பிறரை மதித்து நடத்தவும் வேண்டும்.

இந்த முறையில் இறைவனை அறிந்தால் அன்பு மலரும். ஏனென்றால் இறைநிலை என்பது இறுக்க ஆற்றல். எல்லாவற்றையும் ஈர்த்துப் பிடித்துக் கொண்டு இருக்கிறது.

இந்தப் பேரியக்க மண்டலத்தில் உள்ள கோடான கோடி நட்சத்திரங்களை எல்லாம் கட்டிப் பிடித்து ஒன்றை விட்டு ஒன்று பிரியாமல் வைத்துக் கொண்டிருக்கிறதே இதுதான் அன்பு. அன்பு என்றால் ஈர்த்துப் பிடித்துக் கொண்டிருப்பது, கவர்ந்து பிடித்துக் கொண்டிருப்பது. ...

அந்த அன்புக்கு மேலாக எல்லாம் நலமாக இருக்க வேண்டி உதவி செய்வது கருணை. இந்த இரண்டும் வேறு வேறு அல்ல. அன்பை உணர்ந்தால் தானாகவே கருணை பிறக்கும்.

உதாரணமாக :

ஒரு குழந்தையைத் தாய் தன்னோடு இணைத்துக் கொண்டிருப்பது, விடாமல் பார்த்துக் கொள்வது அன்பு (Love). அதற்கு மேலாக அதை ஊட்டி வளர்ப்பது கருணை (Compassion). இறைவனின் தன்மாற்றத்தில் தாவரம் முதல் எல்லா இடங்களிலும் இந்த அன்பை பார்க்க முடியும்.

மாமரத்தில் ஒரு பிஞ்சு தொங்கிக் கொண்டிருக்கிறது. அது விழாது இருப்பதற்குக் காம்பு அதைப் பிடித்துக் கொண்டு இருக்கிறது. அது மேலும் வளரும்போது அதனுடைய கவனத்திற்கு தகுந்தவாறு காம்பு பெரிதாகி அதை விழாமல் பிடித்துக் கொண்டிருக்கிறதே அதுதான் அன்பு.

அதற்கு மேலாக அது வளர்வதற்கு வேண்டிய இரசத்தை ஊட்டி பாதுகாத்து பெரிதாக்கி பழமாக வளரச் செய்கிறது. அதுதான் கருணை.

அன்பும் கருணையும் இறைநிலையின் தன்மை. இது சீவகாந்தத்தின் மூலமாக எழும் இறைநிலையின் மலர்ச்சி.

''கருவுக்குள் முட்டைக்கும் கல்லுக்குள் தேரைக்கும்
உணவை வைத்த இறைவன் என்னை மட்டும் விட்டு விடுவானா ?''
என்று பழைய பாடல் ஒன்றின் மூலம் அறிகிறோம்.

நாம் தோண்றுவதற்கு முன் நமக்குத் தேவையானவற்றை இறைவன் பூமியில் படைத்திருக்கிறான் என்பதை நாம் அறிவோம்.

ஒருவருக்கு வாழ்க்கைத் துணை தேவை என்றால் உடனே தயார் செய்யவா முடியும் ? எவ்வளவு கருணையோடு நமக்காக உலகில் படைத்து வளர்த்து நம் வளர்ச்சிக்காகவும், மகிழ்ச்சிக்காவும் அருள்புரிகிறது.

சிந்தித்தால், ஒவ்வொரு விஷயத்திலும் சமுதாயத்திலிருந்தே நமக்கு உதவி வருகிறது என்பதை அறிய முடியும். எனவே, அன்பை நாம் பெற வேண்டுமெனில் முதலில் அன்பை நாம் தந்தாக வேண்டும். அன்பும் கருணையும் தன்னை உணர்ந்த உயிருக்கு எளிதில் புரியும். தன்னை உணர நினைப்பவர்க்கு அன்பும் கருணையும் நிறைந்த மனம் இறைநிலையோடு இணைத்து வைக்கும்.

உலகில் அன்பும் கருணையும் நிலைபெற்றாலன்றி தனிமனித அமைதி, குடும்ப அமைதி, உலக அமைதி என்பதெல்லாம் கேள்விக்குறியே!. —தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி

## அரசியல்வாதி

அரசியல்வாதி கடவுளையும்
ஏமாற்றக் கூடியவன். – ஷேக்ஸ்பியர்

வாழத்தெரியதோர் பெரும்பாலோர் வாழ்நாட்டில்
ஆளத் தெரி0யாதோர் ஆட்சியே நடைபெறும்.
கோழை, கயவர். கொலைஞர். தடியர்கள்,
எழை நோயுற்றோர் எங்குமே காட்சியாம்'' – வேதாத்திரியம்

## இன்பம் துன்பம்

வாழ்வெனும் ஆடையில்
இன்பம் துன்பம் என்னும்
இரு நூல்களும்
இருக்கவே செய்யும்.'' – ஷேக்ஸ்பியர்

''இன்பத்தும் துன்பத்தும், இயற்கையும் கற்பனையும் சிந்தித்து அறிபவன், சிறப்பாக வாழ்வான்.'' – வேதாத்திரியம்

## எண்ணம் எண்ணம் எண்ணம்

''காற்றை விட கடும் வேகம் கொண்டது
பெண்ணின் எண்ணம்.'' – ஷேக்ஸ்பியர்

''எண்ணத்தின் வேகமும் இயல்பும் அறிந்தோர்க்கு
எண்ணமே இன்பமயம்! எண்ணம் அமைதி பெறுக.'' – வேதாத்திரியம்

## நேர்மை நேர்மை நேர்மை

நேர்மையைப் போல்
வளமான சொத்து
வேறு எதுவுமில்லை. – ஷேக்ஸ்பியர்

''வாழ்நாள் முழுவதும் மகிழ்ச்சியாக இருக்க நேர்மையை மட்டும் பின்பற்று'' – வேதாத்திரியம்

## நல்லோர் பண்பு நல்லோர் பண்பு

நாகரிகம் மனிதனை விட
அவனது மிகவும்
தேய்த்து விடுகிறது. – ஷேக்ஸ்பியர்

''உடையில் ஒழுக்கம். உள்ளத்தில் கருணை, நடையில் கண்ணியம், நல்லோர் பண்பு'' – வேதாத்திரியம்

## செல்வம் செல்வம் செல்வம்

செல்வம் என்பதுதான்
மனித சமுதாயத்தை
அழிக்கக்கூடிய கொடிய விஷம்.
ஏன் என்றால் உலகில் செல்வத்திற்காக
நிகழ்ந்துள்ள கொலைகள்
மற்றவகைக்காக நிகழ்ந்தவற்றை விட
அதிகமானதாகும். – ஷேக்ஸ்பியர்

''தன் குழந்தைகளுக்கு உயர்கல்வி, நல்ஒழுக்கம், பக்தி, பிறரை மதிப்பதை கற்றுக் கொடுத்து ஆளாக்குவதே உண்மையான செல்வமாகும்.'' வேதாத்திரியம்

## வெறுப்பு வெறுப்பு

மனிதனின் கெட்ட குணங்களை
வெறுத்து விடு..
மனிதனை வெறுக்காதே. – ஷேக்ஸ்பியர்

'விருப்பத்தை ஒழித்துவிட முயல வேண்டாம். வெறுப்பை ஒழித்தால் அதுவே மேன்மை நல்கும்.'' – வேதாத்திரியம்.

விருப்பமே சீவனது இயக்கச் சான்று. வெறுப்பு அறிவின் குறையை விளக்கும் ஆடி.''
– வேதாத்திரியம்

## வறுமை வறுமை வறுமை

மனதில் திருப்தி ஏற்பட்டிருந்தால்
வாழ்வில் வறுமை வந்தாலும்
அது வறுமையாக தெரியாது. – ஷேக்ஸ்பியர்

''அறியாமை, அலட்சியம், உணர்ச்சிவயம் மூன்று வயை ?லும் அறிவு வறுமை நிலவுகிறது.'' – வேதாத்திரியம்

துன்பத்தையே நினைப்பதும், குறைவையே நினைப்பதும் ஒரு ஏழ்மை அறிவினுடைய வறுமையேயாகும்.'' – வேதாத்திரியம்

## மனவளம் மனவளம் மனவளம்

''ஏழையானாலும் உள்ளத்தில்
போதிய திருப்தி இருந்தால்
அதுவே பெரிய செல்வமாகும்.'' – ஷேக்ஸ்பியர்

''மனத்தை எந்த அளவில் உயர்த்திக் கொள்கிறோமோ, தூய்மை செய்து கொள்கிறோமோ,

வலுப்படுத்திக் கொள்கிறோமோ, நெறிப்படுத்திக் கொள்கிறோமோ, அந்த அளவிலேதான் மனிதனுடைய வாழ்வு. மனிதனுடைய மதிப்பு, மனிதனுடைய வெற்றி, மனிதனுடைய எல்லா வளங்களும் அமையும்.'' – வேதாத்திரியம்

## ஒழுங்கு ஒழுங்கு ஒழுங்கு

உள்ளத்தில் ஒழுங்கு முற்றிலும்
குறைந்திருந்தால் நாம் புறத்தில்
ஒழுங்கை நிலை நாட்ட முடியாது. – ஷேக்ஸ்பியர்

''ஒழுங்கீனம் பெருகுதற்கே நிர்ப் பந்தங்கள்,
ஒத்தசூழ் நிலைகள் உள சமுதா யத்தில்,
''ஒழுங்கீனம் புரியாமல் வாழ்வாய்'' என்ற
உத்தமர்கள் போதனைகள் பயன் தராது.
ஒழுங்குவரச் சமுதாய அமைப்பை மாற்றும்
உலக உறுதியோடு அறிஞர் ஆட்சி ஏற்றால்,
ஒழுங்கோடு தனிமனிதர் வாழக் கூடும்.
உலக சமுதாயம் உயர் நிலையை எய்தும்.'' – வேதாத்திரியம்

## நோக்கம் நோக்கம் நோக்கம்

நீ செல்லும் பாதையை சரியாக
தேர்ந்தெடு பிறகு
அந்தப் பாதையில்
உன் பயணத்தை தொடங்கு. – ஷேக்ஸ்பியர்

ஆறாவது அறிவைக் கொண்ட இந்த மனிதன் வாழ்வின் நோக்கம், அறிவு முழுமை பெற வேண்டும். இயற்கையின் முழுமையை உணர வேண்டும், எந்தச் சக்தியிலிருந்து நாம் தோன்றி, வந்து இயங்கிக் கொண்டிருக்கிறோமோ அந்த அடிப்படையை உணர்ந்து அதோடு லயமாகி இணைந்து கொள்ள வேண்டும் என்பதேயாகும். இதுதான் பிறப்பின் நோக்கம். (This and this alone is the purpose of life).

சுருங்கச் சொன்னால் இயற்கையானது பல படித்தளமான பரிணாம இயக்கத்திலே தோற்றங்களாகி, ஓரறிவு முதற்கொண்டு ஆறறிவு வரையிலே வந்து மனிதனாகி, தன்னுடைய மதிப்பையும், தன்னுடைய தகைமையையும், தன்னுடைய அழகையும் ரசிக்கவும், உணரவும் அந்த இயற்கையே எடுத்துக் கொண்ட ஒரு உன்னதமான வடிவம் எதுவோ அதுதான் மனிதன்.

மனிதனில் தான் அறிவினுடைய முழுமையைப் பெற முடியும். பழக்கத்தின் வழியே நாம் சிக்கி, தேவை, பழக்கம், சூழ்நிலையின் கட்டாயம் (நிர்பந்தம்). இந்த மூன்றினாலும் உந்தப்பட்டுச் செயல் செய்து கொண்டிருக்கிறோம்.

இவற்றிலிருந்து விளக்கம் பெற்று, விளக்கத்தின் வழியே நாம் வாழ்க்கையை மாற்றி அமைக்க வேண்டுமானால் உடனடியாக விளக்கம் வராது, பழக்கத்திலிருந்து உடனடியாக மாறி விடவும் முடியாது. முறையான பயிற்சி வேண்டும்.

விளக்கத்திலேயும் பயிற்சி வேண்டும். அப்படி விளங்கிக் கொண்ட பிறகு நாம் எங்கே இருக்கிறோம், எங்கே போக வேண்டும், அதிலுள்ள வேறுபாடு, தூரம் என்ன என்பதைக் கண்டு, படிப்படியாகத் தன்னை மாற்றி உயர்த்தி அந்த இடத்தை அடைய வேண்டும். அத்தகைய திருப்பம் எதுவோ அது தான் பக்தி மார்க்கம், ஞான மார்க்கம் எனப்படும் ஆன்மீக வாழ்வு ஆகும்.'' வேதாத்திரியம்

## நட்பு நட்பு நட்பு

வேதாத்திரியம் எனும் தத்துவத்தை வலியுறுத்தும் ஞானக்களஞ்சியம். நட்பின் அவசியத்தையும் முக்கியத்துவத்தையும் வலியுறுத்துகிறது வேதாத்திரியம்

**'Merchant of Venice', 'Two Gentlemen of Verona'** என பல நாடகங்களிலும் ஷேக்ஸ்பியர் வலியுறுத்தும் நட்பும் உறவும் வேதாத்திரியத்தின் தத்துவத்துக்கு அருகே வருகின்றன.

– ஷேக்ஸ்பியர்

வேதாத்திரியம் இதையும் மீறி நிற்கும் இடங்கள் பல உண்டு. எதிரியையும் வாழ்த்து, பகைவன் பதிவை நீக்க வந்த துணைவன்,'' எனும் சரண் என்றால் மன்னிக்கும் தத்துவம் வேதாத்திரியத்திற்கு மட்டுமே உரிய ஒன்று. – வேதாத்திரியம்

# மாயை மாயை மாயை

மாயங்கள் நிரம்பிய கருக்களை இரு படைப்பாளிகளும் படைத்துள்ளனர். மாயைப்பற்றி வேதாத்திரியம் விரிவாகவும் விளக்கமாகவும் மானுடத்தின் மனதில் பதிய வைத்துள்ளது.

- பிறப்பு, இறப்பு நடுவே இவ்வுலக வாழ்வு. இதை பிறப்பு நிலையில் உள்ள மதியின் போக்கே மாயை.
- கற்பனை வேகத்தால் இயற்கையை மறந்து, சமூகத்தின் அமைப்பையும், மக்களின் எண்ணம், செயல்களால் விளைந்து வரும், விளையப் போகும் நிகழ்ச்சிகளையும் மறந்த உடலளவில் தேவையையும், அறிவுக்கு அந்த சமயப் பொருத்தத்தையும் ஞாபகத்தில் கொண்டு "புலனறிவின் எல்லையிலேயே மட்டும் விரிந்து, மயக்க நிலையில் எண்ணிச் செயலாற்றுவது மாயை என்பதாகும்
- இந்த கையை, காலையெல்லாம் வைத்துக் கொண்டு, காரியங்கள் செய்கிறோம் என்று நிகை ?கிறோம் பாருங்கள். அதைத்தான் மாயை என்றும் சொல்கிறோம்.
- தன்னிலை விளக்கம் அறிந்த, தானே தன்னை விடுவித்துக் கொள்ள முடியாத மயக்க நிலையை, மாயை என்று சொல்லுகிறோம்.
- செய்ததையே மீண்டும் மீண்டும் செய்துகொண்டு விளக்கம் இல்லாமல் அந்த இருட்டிலேயே மனிதன் நடக்கிறபோது, நல்லது கெட்டது தெரியாமல் மேலும் மேலும் அவன் துன்பத்திற்கு ஆளாகும் நிலையை "மயக்கம்" "மாயை" என்று சொல்கின்றார்கள்

ஷேக்ஸ்பியரில் வரும் மாயங்கள் ஒரு கதையை விளக்கவோ, மாயத்தைக் காட்டி பிறரை மயக்கவோ மட்டுமே பயன்படுகிறது என்பதால் வேதாத்திரியத்தின் அளவுக்கு மாயக்காட்சிகள் மானுடத்திற்கு பயன்படுவதில்லை"

# பேராசை பேராசை பேராசை

ஷேக்ஸ்பியர் நாடகங்களில் துன்பியல் நாடகங்களே இன்று வரை புகழ்பெற்றவையாக இருக்கின்றன. அவற்றில் மாக்பெத் நாடகம் மிகுந்த சிறப்பைப் பெற்றது.

பேராசை எப்படி ஒரு மனிதனை அடியோடு சாய்த்துவிடும் எனக் காட்டும் நாடகம். லேடி மாக்பெத் பெண்மையின் எந்த இலக்கணமுமின்றி மாக்பெத்தை தூண்டிவிட்டு கொடிய கொலைகளை செய்யவைக்கிறாள்.

''''தான்'', ''தனது'', என்ற எண்ண எழுச்சி இரண்டுமே இச்சையின் வயப்பட்டவை. இவ்விரண்டும் சேர்ந்து பெற்ற முதல் குழந்தை பேராசை. எவ்வளவுதான் இருந்தாலும் அதற்கும் மேலே வேண்டும் என்ற பரபரப்பு ஒருவனுக்கு வருகிறது. ஏனெனில் வல்லாம் வல்ல இறைநிலை அல்லவா அவனின் உள்ளே இயங்கிக் கொண்டிருக்கிறது. அது எங்கே இருந்தாலும் விரிவடைந்து கொண்டே இருக்கின்ற தன்மையுடையது.'' வேதாத்திரியம்

பெண்மை பெண்மை பெண்மை

மாக்பெத் நாடகத்தில்,

I have given suck and know
How tender tis to love the babe that milks me
I would, while it was smiling in my face
Have plucked my nipple from his boneless gums
And dashed the brains out, had I so sworn as you
Have done to this – ஷேக்ஸ்பியர்

பிள்ளையைத் தரையில் அடித்து முக்குளத்தை சிதறவைக்க வேண்டுமென்றாலும் செய்துவிட்டு என் வேலையைத் தொடருவேன் என்கிறாள் லேடி மாக்பெத். லேடி மாக்பெத் பெண்ணே அல்ல அவள் ஒரு அரக்கி என விமர்சகர்கள் கருதுமாறு இது போல பல நிகழ்வுகளும் மாக்பெத்தில் உண்டு.

ஆனால் வேதாத்திரியத்தில் பெண்மை போற்றப்படுகிது. பெண்ணின் குணங்கள் எப்படி அமைய பேவண்டும் என்று வலியுறுத்தப்படுகிறது.

கருத்தரித்த நாள் முதற்கொண்டு ஒன்பது மாதம் பத்து நாள் வரையில் ஒரு தாய்க்கு என்ன துன்பம் இருக்கும் என்று யாராலும் எண்ணிப் பார்த்தால், அதைவிட துன்பம் உலகத்தில் மனிதனுக்கு இருக்க முடியாது.

எல்லையற்ற பெருவெளியாகி மெய்ப்பொருள் தன்னில் உள்ளமைந்துள்ள ஆற்றலால் நுண்ணியக்க மூலக்கூறாகிய ஆகாசமெனும் சக்தியாகி, சிவம் சக்தி இரண்டின் கூட்டுச் சேர்க்கையில், விகிதாச்சார அமைப்புக்கேற்ப அணு முதல் அண்ட கோடிகளாக விளங்குவதை சிந்தனையாற்றல் பெற்ற அனைவரும் அறிவோம்.

.பேரியக்க மண்டலமெனும் பிரபஞ்சத்தின் ஆக்கம், நிகழ்வு, முடிவு எனும் மூன்றும் அணுக்கள் கூடுதல், இயங்குதல், பிரிதல் எனும் நிகழ்ச்சிகளேயாகும். எனினும் உயிரினங்கள் தோற்றங்கள், காப்பு இவற்றை பெண்மையினிடத்தே அருட்பேராற்றல் அமைத்திருக்கும், ஒப்புவித்திருக்கும் பேருண்மையை உணர்ந்து போற்ற வேண்டியுள்ளது. வேதாத்திரியம்

''பெண் வயிற்றிலுருவாகிப் பின்னுமந்த

பெண் கொடுத்த பால் உண்டே வளர்ந்துமேலும்

பெண்துணையால் வாழுகின்ற பெருமை கண்டு.

பெண்மையிடம் பெருமதிப்பு அறிஞர் கொள்வார்;

பெண்மையே தன் உடலில் பாதியாகும்

பேருண்மை உணர்ந்ததனால், எனினும் சில்லோர்

பெண்ணினத்தைப் பழித்தெழுதிப் பாடியுள்ளார்

பேதைமையால், அறிவுநிலை உயரா முன்னம்.''

– வேதாத்திரியம்

## ஷேக்ஸபியரின் ''ஹாம்லட்'' நாடகத்தில் தரும் ஞானம்

டென்மார்க்கின் இளவரசனான ''ஹாம்லட்'' என்பவனது வாழ்வை அடிப்படையாகக் கொண்ட சோகக் கதை அது.

பதிமூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த கதைகள், சரித்திரங்களின் தொகுப்பில் அவனைப் பற்றி படித்த அவர் அக்கதையை நாடமாக ஆக்கும் கற்பனையில் ஆழந்து விட்டார்.

அதை எழுதுவதில் முன்னேற்றம காணப்பட்டது. முதல் அத்தியாயத்தில் முதல் இரண்டு காட்சிகளை அவர் ஏற்கனவே எழுதி முடித்து விட்டார். கலவையான ஆனால் உயர்ந்த குணமுள்ள இளைஞனாக ஹாம்லட் கதாபத்திரம் உருவாகிக் கொண்டிருந்தது.

இப்படிப்பட்ட வேலையைத்தான் அவர் இரசித்து எழுதி வந்தார். கடந்த காலததிலிருந்து ஒரு பிரம்மாண்டமனா கதா பாததிரத்தைத் தேர்ந்தெடுத்த, அவனுக்கு ஆன்மாவையும் உணர்வையும் ஊட்டி, அவனது சமகாலத்தவரோட உலவிட்டு அவனை உயிர் பெறச் செய்வார்.

அடுத்த காட்சியல் லேர்ட்ஸ், பதிய அரசனின் முடிசூட்டு விழாவிற்காக டென்மார்க்கிற்கு வந்தவர்.பிரான்ஸ் செல்ல கப்பல் ஏறினார்.,

சேம்பர் லெனின் பிரபுவான பொலோனியஸ் என்ற அறிஞரான, நுட்பமான குணமுள்ள அவரது தந்தையை விட்டு அவர் விடை பெறுகிறார்.

இங்கே. இந்த இடத்தில் பொலலோனியசின் வாயின் வாயிலாக அவர் மகனுக்கு அறிவுரை சொல்ல அவனது வாழ்வையும் நடத்தையையம் மேம்படுத்த முயற்சி செய்வதாக ஷேக்ஸ்பியர் காட்சி அமைக்க முடிவு செய்தார்.

இந்த ஞானமுள்ள வரிகள் இலட்சக்கணக்கானவர்களின் இதயத்தைத் தொடும் என்ற அவற்றை எழுதும்போது ஷேக்ஸ்பியர் நினைக்கவே இல்லை.

''இதோ உனக்கு என் ஆசிகள் உரித்தாகட்டும்!
இந்த அறிவுரைகள் உன் நினைவில் நின்று
உன் நடத்தைகளை உருவாகட்டும்.

உனது எண்ணங்களை சொல்லாதே.
தீ ?மானிக்காத எண்ணத்தை செயலாக்காதே
நட்பாக நடந்துகொள். ஆனால் அநாகரீகமாக நடக்காதே

உனக்கிருக்கும் நண்பர்கள், அவர்களது நண்பர்களை
இரும்பு வளையங்களால் உன் இதயத்தோடு பிணைத்துக்கொள்
ஆனால்ஒவ்வொரு பதிய, முதிர்ச்சியடையாத தோழனொடும்
கேளிக்கையில் மூழ்கி உன் கரத்தை மாசுபடுத்தாதே

சண்டையில் இறங்காமல் எச்சரிக்கையாயிரு
ஆனால் இறங்கிவிட்டால் எதிராளி உன்னிடம்
எச்சரிக்கையாயிருக்கச் செய்.

எல்லோருக்கும் செவி கொடு. ஆனால் சிலருக்கே குரல் கொடு
எல்லோருடைய கண்டனங்களையும் பெற்றுக் கொள்,
ஆனால் முடிவை நீ எடு.

உன் பணத்தால் வாங்க முடியாத உன் நடத்தை
உயர்வாயிருக்கட்டும்.
ஆனால் செயற்கையாக நடந்து கொள்ளாதே!
செழிப்பாயிருக்கட்டும். ஆனால் பகட்டாயிருக்கக் கூடாது.
ஆடைதான் மனிதனை வெளிப்படுத்துகிறது.

கடன் கொடுக்காதே வாங்கதே
கடன் கொடுத்தால் கடனும் போய் விடும்
நண்பனும் போய் விடுவான்
கடன் வாங்குவதால் சிக்கனம் கெடுகிறது.
எல்லாவற்றிற்கும் மேலாக, உனக்கு நீ உண்மையாய் இரு.
இரவும் பகலும் இது தொடரட்டும்
எவனுக்கும் நீ பொய்யாக இருக்க முடியாது''

ஹேம்லட் ஷேக்ஸ்பியரின் உன்னத நாடகமாகும். அதில் தந்தை மகனுக்கு சொல்லும் அறிவுரைகள் மிகவும் புகழ் பெற்றதாகும்.

மிகவும் ஞானத்துடன் நெஞ்சை ஊடுருவுவதாக இந்த அறிவுரைகள் அமைந்தன. நாடகத்தை விட்டு தனியே எடுத்துப் பார்த்தாலும் அதே முக்கியத்துடன் முழுமையாக இருக்கின்றன.

ஒவ்வொரு வரியிலும் உண்மையாயிருப்பது தெரிகிறது. வார்த்தகளில் ஆன்மீக மணம் கமழ்கிறது.

எல்லாவற்றிற்கும் மேலாக, ''உனக்கு நீ உண்மையாய் இரு. உலகில் மற்ற கட்டளைகள் இருந்தாலும் தனி மனிதனுக்கு இதைவிட ஆழமான அர்த்தமுள்ளது இல்லை.

''உனது நடத்தையைக் கவனி. உண்மையாயிரு, விசுவாசமாயிரு'' என்று தந்தை மகனை வலியுறுத்துகிறார்.

இர் ஷேக்ஸ்பியரின் வரிகளில் பிரபலமான வரிகள். பலர் இவை அர்த்தமுள்ளதாகவும் தங்கள் வாழ்வில் உதவி செய்வதாகவும் கருதியிருக்கிறார்கள்.

இந்தகைய ஞானமுள்ள அறிவுரைகைளை நாம் வேதாத்திரியத்தில் பல இடங்களில் காணலாம்.

## வேதாத்திரியத்தில் ஞானப் பொன்மொழிகள்

- மனத்தூய்மை, சத்தான உணவு, அளவான உழைப்பு, முறையான ஓய்வு இவற்றைப் பின்பற்றினால் உடல்நலத்துடன் வாழலாம்.
- இன்றைய உலகில் பணத்திற்கும், பண்புக்கும் போட்டி நிலவுகிறது. இதில் பண்பு தான் தோற்றுப் போய் நிற்கிறது

- பிறர் மீது கோபம் கொள்ளும் போது அந்தக் குறை நம்மிடம் இருக்கிறதா என்றும் சிந்திக்க வேண்டும்.
- அனைத்தும் ஒன்று என்று அறிந்தவன் செய்யும் செயல்கள் அனைத்தும், அன்பின் வெளிப்பாடாக இருக்கும்.
- அமைதி எங்கு தேடினாலும் கிடைக்கப் போவதில்லை. மனதின் உள்ளிருந்து தான் அதைப் பெற்றாக வேண்டும்.
- உண்மையில் எதிரி ஒருவன் இருக்கிறான் என்றால், மனதில் எழும் ஒழுங்கற்ற எண்ணங்களே.
- உணவில் எளிமை, உழைப்பில் நேர்மை, ஒழுக்கத்தில் உயர்வு இந்த மூன்றும் உத்தமர்களின் இயல்பு.
- கவலைப்படுவதால் மனதின் ஆற்றலும், உயிரின் சக்தியும் வீணாகிறது. எதிலும் அளவறிந்து வாழப் பழகினால் சிக்கலுக்கு இடமிருக்காது.
- ஆசையை சீர்படுத்தி வாழ்ந்தால் வாழ்வே ஆனந்த மயமாகி விடும்.
- உழைப்பால் மனிதன் தலைநிமிர்ந்து வாழலாம். மற்றவர்களையும் வாழ வைக்கலாம்.
- உள்ளத்தில் பகையுணர்வு இருந்தால் யாரையும் வாழ்த்த முடியாது. வாழ்த்திப் பழகிவிட்டால் பகையுணர்வு நீங்கும்.
- ஆசைகளை அடியோடு ஒழிக்க முடியாது. அதை சீரமைத்துக் கொள்வதே நல்லது.
- நீ யார் என்று அறிய ஆர்வம் எழுந்து விட்டால், அது உன்னை அறியும் வரையில் அமைதி பெறுவதில்லை
- எந்தச் சூழ்நிலையிலும் ஒரு மனிதனுக்கு கோபம் வராவிட்டால் அவன் ஞானம் அடைந்ததாகப் பொருள்.
- பேராசை, கோபம், கவலை, பொறாமை எண்ணங்களுக்கு இடம் அளிக்காமல் மனதைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.
- இயற்கையுடன் ஒத்துப்போனால் உடல்நலம் பாதித்தாலும், அதை தானாகவே சரிப்படுத்திக் கொள்ளும் தன்மை உடலுக்கு கிடைத்து விடும்.
- மனிதர்கள் மனம் போன போக்கில் வாழ்வு நடத்துவது வருந்தத்தக்கதாக உள்ளது. இதை தவிர்க்க வேண்டும்.
- ஆக்கத்துறையில் அறிவைச் செலுத்துங்கள். ஊக்கமுடன் உழையுங்கள். உயர்வு பெறுவீர்கள்.

- கோபப்படுவது நல்லதல்ல. நன்மை உண்டாகும் எனில் கோபப்படுவது போல நடித்தாலே போதும்.
- எல்லாரையும் வாழ்க வளமுடன் என்று சொல்லுங்கள்.
- இயற்கைக்கு எப்போதும் மதிப்பு கொடுங்கள். நீதி, நியாயத்தை வாழ்வில் பின்பற்றுங்கள். அப்போது வாழ்வில் வளமும் நலமும் நிறைந்து இருக்கும்.
- உணவு, உறக்கம், உழைப்பு, உடலுறவு, எண்ணம் ஆகிய ஐந்தில் அளவு முறை வேண்டும்.
- வாழ்வில் மனத்தூய்மை, ஒழுங்கான உணவுமுறை, அளவான உழைப்பு, ஓய்வு இவற்றை முறையாக கடைபிடித்தால் நோயின்றி ஆரோக்கியமாக வாழலாம்.

## வஞ்சம் வஞ்சம் வஞ்சம்

ஷேக்ஸ்பியர் நாடகங்களில் வரும் தீயவர்கள் நம்மைப் போன்ற சாதாரணமான உணர்ச்சிகளுக்கு ஆட்படும் சாமானியர்கள். புரூட்டஸ், லேடி மாக்பெத் போன்ற எதிர் நாயகர்கள் மனித உணர்ச்சிகளை ஒரு நிலையில் வைக்கத் தெரியாதவர்கள். வஞ்சம் கொண்டவர்கள்

வேதாத்திரியம் வஞ்சம் பற்றி என்ன சொல்கிறது ?

தீய வினைப்பதிவுகள் காரணமாக ஒரு மனிதனிடம் வேண்டாத குணங்கள் – ஆறு தீய குணங்கள் உள்ளன. அவை பேராசை, சினம், கடும்பற்று, முறையற்ற பால் கவர்ச்சி, உயர்வு தாழ்வு மனப்பான்மை, வஞ்சம் ஆகும்.

வடமொழியில் இவற்றைக் காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம் என்பார்கள்.

இந்த ஆறு குணங்களும் ஒவ்வொருவரிடமும் ஒவ்வோர் அளவில் இருக்கின்றன. அந்தக் குணங்களையெல்லாம் மாற்றி அமைக்க வேண்டும்.

பேராசையை நிறை மனமாகவும்,
சினத்தை சகிப்புத்தன்மையாகவும்,
கடும்பற்றினை ஈகையாகவும்,
முறையற்ற பால் கவர்ச்சியை கற்பாகவும்,
உயர்வு தாழ்வு மனப்பான்மையை சம நோக்காகவும்,
வஞ்சத்தை மன்னிப்பாகவும்

மாற்றி அமைத்தாலன்றி மனிதன் மனிதனாக இருக்க முடியாது.

ஒரு செயல் நல்லதல்ல; செய்யக்கூடாது என்று நினைதத்தாலுங்கூட உடனே மறந்து விடுகிறான் மனிதன். மறுபடியும் அதே செயலைச் செய்கிறான்.

இந்த நிலையிலே இருந்து மேல்நிலைக்கு மாற வேண்டுமானால் தன்னிடம் என்னென்ன தீய பழக்கங்கள் உள்ளன; வேண்டாப் பழக்கங்கள் உள்ளன என்பதைக் கண்டுபிடித்து ஒவ்வொரு தீய பழக்கத்தையும் நல்ல பழக்கமாக மாற்றி அமைக்கிற முயற்சியில் ஈடுபட வேண்டும்.

இதற்காகவே அகத்தாய்வு (Introspection) என்ற தற்சோதனைப் பயிற்சியான எண்ணம் ஆராய்தல், சினம் தவிர்த்தல், ஆசை சீரமைத்தல், கவலை ஒழித்தல் போன்ற பயிற்சிகள் அவசியம்.

- நிறைய வார்த்தைகள் தெரிந்தவர் ஷேக்ஸ்பியர். இவரது நாடகங்களிலும், கவிதைகளிலும் சுமார் 30,000 வேறு வேறுவிதமான வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. தமிழ் இலக்கியத்திற்கு வேதாத்திரியம் பல புதிய வார்த்தைகளைத் தந்துள்ளது.
- 38 நாடகங்கள், 154 சானட்ஸ் (14 வரிகள் கொண்ட பாடல்கள்), மற்றும் பல பல்சுவை பாடல்களையும் எழுதியிருக்கிறார் ஷேக்ஸ்பியர்.
- ஷேக்ஸ்பியரைப்பற்றிய கூகிள் பக்கங்கள் 157 மில்லியன்.
- இவரது நாடகங்களில் தற்கொலை 13 தடவை நடந்திருக்கிறது.
- வெளி உலகிற்கு மிகப்பெரிய நாடக ஆசிரியர் என்று அறியப்பட்டிருந்தாலும், அவரது ஊரில் மதிப்பிற்குரிய தொழிலதிபராகவும், சொத்துக்களின் அதிபதியாகவும் அறியப்பட்டிருந்தார். வேதாத்திரி மகரியோ ஏழையாகவும் வாழ்ந்தவர் செல்வந்தராகவும் உயர்ந்தவர்.
- அமெரிக்க அதிபர் ஆபிரகாம் லிங்கன் ஷேக்ஸ்பியரின் மிகப்பெரிய விசிறி. நண்பர்களுடன் பேசும்போது அடிக்கடி ஷேக்ஸ்பியரது நாடக வசனங்களைப் பேசிக் காண்பிப்பாராம்.
- தமது 18 வயதில் தன்னை விட 8 வயது மூத்த பெண்மணியை மணந்து கொண்டார் ஷேக்ஸ்பியர் .

- ஆங்கில மொழிக்கு இவர் கொடுத்த வார்த்தைகள் கணக்கிலடங்காதவை. பேச்சு வழக்கில் இருந்த பல வார்த்தைகள் எழுத்துருவில் இவரது நாடகங்களில் இடம் பிடித்தன. பல சொல் வடைகளை பிரபலப்படுத்தவும் செய்தார். தமிழுக்கு பல அரிய சொற்கைளை வழங்கியவர் வேதாத்திரி மகரிஷி.
- இவரது நாடகங்கள் மேடையில் நடிப்பதற்காக அவசரம் அவசரமாக எழுதப்பட்டதினால், அவர் எழுதிய அசல் கையெழுத்துப் பிரதிகள் எதுவும் இப்போது இல்லை. வேதாத்திரி மகரிஷியின் கையெழுத்துப் பிரதிகள் இன்றும் உள்ளன.
- அடித்தல் திருத்தல் இல்லாமல் வேகமாகவும், தங்குதடங்கல் இல்லாமலும் எழுதுவார்கள் இரு படைப்பாளிகளும்.

## திசை காட்டும் வேதாத்திரியம்

- ஒரு படைப்பிலக்கியமாகவோ, பக்தி இலக்கியமாகவோ, கருத்தை திணிக்கும் கசாய இலக்கியமாகவோ இல்லாமல் ஒரு பட்டறிவு இலக்கியமாக இருக்கிறது.
- வேதாத்திரியம் ஒரு தனிமனிதனின் குரல் அல்ல. ஓர் உயர்ந்த நாகரிகத்தின் ஒட்டுமொத்த தெளிவின் திரள்.
- வேதாத்திரியம் ஒரு படைப்பு முயற்சி அல்ல. பரிணாம வளர்ச்சி. மிக உயர்ந்த மீமிசையே பூமிக்கு குடையாக முடியும். மிக உயர்ந்த உன்னதமே உலகுக்கு கொடையாக முடியும்.
- வேதாத்திரியத்தை நாம் எதற்காக இன்றும் கொண்டாடுகிறோம். காரணம் – வேதாத்திரியம் இன்றும் தேவைப்படுகிறது.
- திசைகாட்டும் கருவி திசைகளின் தேர்வு தெளிவாய் இருந்தால் வழிகள் பிறக்கும்; வாசல்கள் திறக்கும். வழிகாட்டிகள் உடன் வருபவர்கள் அவர்கள் யோசிக்க விடுவதில்லை.
- ஆனால்– திசைகாட்டும் கருவி தீர்க்கமானது. தெற்கு வடக்கை தெரிவிக்கும். தேர்ந்தெடுக்க வேண்டியது நாம் தான். திசை என்பது திக்கு.
- வேதாத்திரியம் காட்டும் திசை தெளிவானது. தீர்க்கமானது.அறத்தின் திசையாகவும் வேதாத்திரியம் உள்ளது.

- அறம் நோக்கமாகவும், பயன்பாடாகவும், வழிமுறையாகவும் இருக்கிறது. அறநோக்கம், அறவழி, அறப்பயன். அதுவே அறத்தை பொருளை, இன்பத்தை வழி நடத்துகிறது.
- பிறர்க்கோ தனக்கோ தற்காலத்திலோ பிற்காலத்திலோ அறிவிற்கோ உடல் உணர்ச்சிக்கோ துன்பம் எழாத அளவோடும் முறையோடும் வாழ்க்கையைத் துய்க்கின்ற ஒழுக்கமும், முறையோடும் வாழ்க்கையைத் துய்க்கின்ற ஒழுக்கமும், பிறர்க்கு ஒத்துதவி வாழ்கின்ற ஈகையயும், தனது உழைப்பைக் கொண்டே தனது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்கின்ற கடமையும் இணைந்த தொகுப்புக் கருத்து அறம் ஆகும்.
- ஏரி, குளம், கிணறு, ஆறு எல்லாம் நிரம்பி வழிய. மாரி அளவாய் பொழிக. மக்கள் வளமாய் வாழ்க, நீர்பொருளாதாரத்தை உலகிற்கே முதலில் அறிமுகப்படுத்தியது வேதாத்திரியம் தான்.
- வாழ்வின் ஒவ்வொரு பகுதியையும் வேதாத்திரியம் தெளிவுபடுத்துகிறது.

அந்தக்காலத்தில் 30, 40 வயது வாழ்வது என்பதே பெரிய விஷயமாக இருந்தபோது ஷேக்ஸ்பியர் 52 வயது வரை வாழ்ந்து, 1616, ஏப்ரல் 23 ஆம் தேதி மறைந்தார். இவரது மறைவு தினம்தான் உலகப் புத்தகதினமாக ஆண்டுதோறும கொண்டாடப்பட்டு வருகிறது.

ஸ்ட்ராட்போர்ட் சர்ச்சில் இருக்கும் இவரது கல்லறையின் மேல் எழுதப்பட்ட வார்த்தைகள்: 'என்னை இங்கிருந்து நகர்த்துபவன் சபிக்கப்படுவானாக'.

வேதாத்திரி மகரிஷி கல்லறையின் மீது " வாழ்க வையகம் வாழ்க வையகம் வாழ்க வளமுடன்" என்று எழுத்தப்பட்ட வார்த்தைகைள். இந்த வையகத்தை வளமாக வாழ வைத்துக் கொண்டிருக்கிறது.

## துணைநின்ற நூல்கள்


- ஞானக்களஞ்சியம், வேதாத்திரி மகரிஷி, வேதாத்திரியப் பதிப்பகம், ஈரோடு
- உலக சமாதானம், வேதாத்திரி மகரிஷி, வேதாத்திரியப்
- போரில்லா நல்லுலகம், மன்னார்குடி பானுகுமார், இணையதளம்
- வேதாத்திரியத் தத்துவங்கள் மன்னார்குடி பானுகுமார், இணையதளம்
- வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000, மன்னார்குடி பானுகுமார், விஜயா பதிப்பகம், கோவை.

- வேதாத்திரி மகரிஷி உரைகள் யூடியுப்
- இணையதள தகவல்கள்
- Shakespeare-Arden Edition
- Complete Shakespeare Tales
- William ShakespeareEdith NesbitNov 2018 by Josh Verbae
- Light From Many Lamps, Lillian eislar watsan
- மாக்பெத் நாடகம்




## ஆன்மீகம்

1. தியானம் பழக 100 தியான சிந்தனைகள்
2. அறிவியல் நோக்கில் 100 ஆன்மீகச் சிந்தனைகள்
3. கோள்களை வென்ற இடைக்காட்டுச் சித்தர்

## வாழ்க்கை வரலாறு

1. நெப்போலியன் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
2. புத்தர் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
3. இயேசுவின் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
4. குருவுடன் வாழ்ந்தவர் (புலவர் தியாகராஜனார்)
5. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்

## தன்னம்பிக்கை தன்னம்பிக்கை

1. தன்னம்பிக்கை மலர்கள்.
2. டென்சனை வெல்வது எப்படி ?
3. காலமே உன் உயிர்
4. வேதாத்திரி மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்
5. ஓய்வுக்குப் பின்னும் உற்சாக வாழ்க்கை

## வேதாத்திரி மகரிஷி 1

1. இந்திய தத்துவ வரலாற்றில் வேதாத்திரி மகரிஷி
2. வேதாத்திரி மகரிஷி பற்றி 100 அறிஞர்கள்.
3. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 1)
4. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 2)
5. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 3 )
6. தினசரி தியானம்.
7. வரலாறு போற்றும் குரு சீடர்கள்
8. "வாழ்க வளமுடன்" என்ற வார்த்தை ! சரியா ? தவறா ? இலக்கணம் என்ன சொல்கிறது ?
9. பன்முகப்புரட்சியில் வேதாத்திரி மகரிஷி
10. பன்முகப் பார்வையில் வேதாத்திரி மகரிஷி
11. வேதாத்திரி மகரிஷியின் தத்துவ தரிசனங்கள்

12. எல்லாம் வல்ல தெய்வமது
13. போரில்லா நல்லுலகம்
14. அதுவானால் அதுவே சொல்லும்
15. உய்யும் வகை தேடி அலைந்தேன்.
16. தினந்தோறும் வேதாத்திரியம்
17. வாழும் வேதாத்திரியம்
18. என்னைச் செதுக்கிய வேதாத்திரியத்தின் ஞானக்களஞ்சியம்
19. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
20. மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்
21. தாயுமானவர் வள்ளலார் வேதாத்திரி மூவரும் ஒருவரே
22. வேதாத்திரியம் கற்போம்
23. மனைவிக்கு மரியாதை
24. எல்லாம் வல்ல தெய்வமது
25. வேதாத்திரியப் பார்வையில் வறுமை என்பது இல்லை.
26. அவதாரப் புருஷர் அருட்தந்தை
27. வேதாத்திரியம் ஒரு ஜீவ யாத்திரை
28. வேதாத்திரியத்தில் அறம்

## ஒப்பாய்வு (வேதாத்திரி மகரிஷி)

1. வள்ளலாரும் வேதாத்திரி மகரிஷியும்.
2. மகாவீரரும் வேதாத்திரி மகரிஷியும்
3. தாயுமானவரும் வேதாத்திரி மகரிஷியும்
4. ஞாலம் போற்றும் ஞானிகள்
5. வேதாத்திரியத்தில் கலந்த நதிகள்.
6. ஞானதீபமும் ஞான ஒளியும்.
7. கிழக்கும் மேற்கும்

8. வேதமுதல்வரும் வேதாத்திரியும்
9. ஞான வள்ளல்கள் (ஸ்ரீராமகிருஷ்ணரும் வேதாத்திரி மகரஷியும்)
10. பாமரமக்களின் தத்துவஞானிகள் (அச்சில்)
11. சித்தர்களும் வேதாத்திரி மகரிஷியும்.
12. மாணிக்க வாசகரும் வேதாத்திரியும்
13. சிவவாக்கியாரும் வேதாத்திரி மகரிஷியும்.
14. ஆனந்தக் களிப்பும் பேரின்பக் களிப்பும்
15. சுகவாரியும் பேரின்ப ஊற்றும்
16. பட்டினத்தாரும் வேதாத்திரி மகரிஷியும்

## தாயுமானவரும் வேதாத்திரி மகரிஷியும் (ஒப்பாய்வு)

1. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆனந்தமான பரம்.
2. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சின்மயானந்த குரு.
3. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பொருள் வணக்கம்.
4. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் தேஜோமானந்தம்.
5. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் எங்கும் நிறைந்த பொருள்..
6. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சச்சிதானந்த சிவம்.
7. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் கருணாகரக் கடவுள்
8. தாயுமானவர் வள்ளலார் வேதாத்திரி மூவரும் ஒருவரே
9. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பாயப்புலி
10. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பைங்கிளிக் கண்ணி
11. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பொன்னை மாதரை
12. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆகார புவனம்
13. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் எந்நாட்கண்ணி
14. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சித்தர் கணம்
15. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மௌனகுரு வணக்கம்

16. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மலைவளர்க் காதலி
17. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் இந்திரியங்களின் கொட்டம்
18. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மனம் என்னும் மாயை
19. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆறுபகைவர்கள்
20. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் அருள்தாகம்
21. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் இறைவழிபாடு
22. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் வழிபாடு ஏன்,
23. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆனந்த இயல்பு
24. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பராபரக்கண்ணி பாகம் 1
25. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பராபரக்கண்ணி பாகம் 2
26. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பராபரக்கண்ணி பாகம் 3

## திருவாசகமும் வேதாத்திரியமும் (ஒப்பாய்வு)

1. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் யாத்திரைப் பத்து.
2. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சப் பத்து.
3. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அடைக்கலப் பத்து.
4. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் செத்திலாப் பத்து.
5. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அதிசயப் பத்து.
6. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் உயிர் உண்ணிப் பத்து.
7. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குழைத்தப் பத்து.
8. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் பிடித்தப் பத்து.
9. வேதாத்திரியப் பார்வையில்திருவாசகத்தின் பிரார்த்தனைப் பத்து.
10. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சிவபுராணம்
11. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆசைப் பத்து
12. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சோ பதிகம்
13. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அருட்பத்து

14. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அற்புதப்பத்து
15. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அன்னைப்பத்து
16. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் கண்டபத்து
17. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குயிற்பத்து
18. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சென்னிப்பத்து
19. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் புணர்ச்சிப்பத்து
20. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் வாழாப்பத்து
21. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆனந்த பரவசம்
22. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குலாப்பத்து

## பாரதியாரும் வேதாத்திரியமும் (ஒப்பாய்வு)

1. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் ஞானப்பாடல்கள்
2. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் தத்துவப் பாடல்கள்
3. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் பிரம்மஞானம்
4. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் மானுட சிந்தனைகள்

## ஜென்னும் வேதாத்திரியமும்

1. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 1
2. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 2
3. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 3
4. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 4
5. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 5

## தாயுமானவர் தாயுமானவர்

1. சேரவாரும் ஜெகத்தீரே
2. தாயுமானவரின் இலக்கிய நயம்
3. தாயுமானவரின் மெய்ப்பொருள்
4. தாயுமானவரின் சமயநெறி

5. தாயுமானவரின் உடல் பொய்யுறவா ?

6. தாயுமானவரின் கடவுள் கோட்பாடு

7. தாயுமானவரும் மகான்களும்

8. தாயுமானவர் ஆன்மீக வாதியா ? அரசியல் ஞானியா ?

9. தாயுமானவர் தரும் இடம், பொருள், ஏவல்

10. தாயுமானவரின் அத்வைதமும் வேதாத்திரியின் அத்வைதமும்

11. தாயுமானவரின் ஆன்மீகச் சிந்தனைகள்

12. தாயுமானவரின் ஞானதாகம்

13. தாயுமானவரின் இலட்சியப் பயணம்

14. தாயுமானவரின் பிரபஞ்சக் கோட்பாடு

15. தாயுமானவரின் உயிர் விளக்கம்

16. GARLAND OF PARAAPARAM

17. தாயுமானவர் போற்றும் அறம்

18. அறிவேதான் தெய்வமென்றார் தாயுமானவர்

19. ஏன் அவதரித்தார்கள் ?

20. தாயுமானவரின் பரநடையும் உலக நடையும்

21. இன்பம் பெறும் வழி யாது ? தாயுமானவர்

22. தாயுமானவர் பாடல்களில் மனம்

23. தாயுமானவர் வழிபாடு ஏன் ?

24. தாயுமானவருக்கு மறுபிறவி உண்டா ?

25. கல்லாத பேர்களே நல்லவர்கள் தாயுமானவர்

26. கடவுளின் விலாசம் தருகிறார் தாயுமானவர்

27. தாயுமானவர் எதை பலி கொடுக்கச் சொன்னார் ?

28. தாயுமானவர் தரும் இறைவழிபாடு

29. தாயுமானவருடன் வாழ்வோம்

30. தாயுமானவரின் உவமைகள் 100

## ஜென்னும் திருவாசகமும்

1. ஜென்னும் திருவாசகமும் பாகம் 1
2. ஜென்னும் திருவாசகமும் பாகம் 2
3. ஜென்னும் திருவாசகமும் பாகம் 3

## புலவர் தியாகராஜனார்

1. குருவுடன் வாழ்ந்தவர்
2. வரலாறு போற்றும் குரு சீடர்கள்
3. புலவர் தியாகராஜனார் அரிய செய்திகள் 100
4. குரு பக்தியின் வடிவம் புலவர் தியாகராஜனார்

## வரலாறு மன்னார்குடி

1. மன்னார்குடி மன்னார்குடிதான் அரிய செய்திகள் 1000
2. மன்னார்குடி வரலாறு

## பயண நூல்கள்

1. ஞாபகம் வருதே ஊர் ஞாபகம் வருதே !
2. அமெரிக்க மண்ணில் ஆறு மாதங்கள்

## தன்னம்பிக்கை தன்னம்பிக்கை

1. தன்னம்பிக்கை மலர்கள்.
2. டென்சனை வெல்வது எப்படி ?
3. காலமே உன் உயிர்
4. வேதாத்திரி மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்.
5. ஓய்வுக்குப் பின்னும் உற்சாக வாழ்க்கை
6. தன்னம்பிக்கை மலர்கள்

## சிறுகதைகள்

1. செயலே விளைவு
2. தவம்
3. தொலைந்து போன உறவுகள்
4. பத்மாவும் கதவும்

## ஆராய்ச்சி

## நன்மக்கட்பேறு 100 நற்சிந்தனைகள்

## பானுகுமார் படைப்புலகம்

1. நானும் என் எழுத்தும்
2. நீங்களும் எழுதலாம் வாங்க
3. புத்தகம் எழுதலாம் வாங்க
4. வேதாத்திரியத்தில் எழுதலாம் வாங்க
5. ஒப்பாய்வு இலக்கியம் எழுதலாம் வாங்க
6. நான் ஏன் எழுதுகிறேன்

## கம்பனும் வேதாத்திரியமும்

1. கம்பனும் வேதாத்திரியமும் (இலக்கிய திறனும் கருத்தியலும்)
2. கம்பனும் வேதாத்திரியமும் (நாடும் அரசும்)
3. கம்பனும் வேதாத்திரியமும் (இறை சிந்தனைகள்)
4. கம்பனும் வேதாத்திரியமும் (மானுடம் வென்றதம்மா)

## உலகப் புகழ்பெற்ற தத்துவஞானிகளும்

## வேதாத்திரி மகரிஷியும் (ஒப்பாய்வு இலக்கியம்)

1. லியோ டால்ஸ்டாயும் வேதாத்திரி மகரிஷியும்
2. ஹிப்பாக்ரட்ஸ்ஸீம் வேதாத்திரி மகரிஷியும்
3. ஹென்றிவேர்ட்ஸ்வொர்த் லாஜ்பெலோவும் வேதாத்திரி மகரிஷியும்
4. பெர்ட்ராண்ட் ரசல்லும் வேதாத்திரி மகரிஷியும்

5. கலில் ஜிப்ரானும் வேதாத்திரி மகரிஷியும்
6. கன்பூசியனிசமும் வேதாத்திரி மகரிஷியும்
7. தஸ்தயேவ்ஸ்கியும் வேதாத்திரி மகரிஷியும்
8. ஜலாலுதீன் ரூமியும் வேதாத்திரி மகரிஷியும்
9. லாவோசும் வேதாத்திரி மகரிஷியும்
10. ஷேக்ஸ்பியரும் வேதாத்திரி மகரிஷியும்
11. சாக்கரட்டிஸ்ஸீம் வேதாத்திரி மகரிஷியும்
12. அரிஸ்டாடிலும் வேதாத்திரி மகரிஷியும்
13. பிளேட்டோவும் வேதாத்திரி மகரிஷியும்
14. செனகாவும் வேதாத்திரி மகரிஷியும்
15. மிர்தாவின் புத்தகமும் வேதாத்திரியமும்
16. நீட்சேயும் வேதாத்திரி மகரிஷியும்
17. சர் ஐசக் நியூட்டனும் வேதாத்திரி மகரிஷியும்
18. வால்டேரும் வேதாத்திரி மகரிஷியும்
19. ரால்ப் வால்டோரா எமர்சனும் வேதாத்திரி மகரிஷியும்
20. சார்லஸ் டார்வினும் வேதாத்திரி மகரஷியும்.
21. காரல் மார்க்ஸ்ஸீம் வேதாத்திரி மகரிஷியும்
22. இராபர்ட் கிரீன் இங்கர்சாலும் வேதாத்திரியும்.
23. சிகமண்ட் பிராய்டும் வேதாத்திரி மகரிஷியும்.
24. ஜேம்ஸ்ஆலனும் வேதாத்திரி மகரிஷியும்.
25. ஐன்ஸ்டைனும் வேதாத்திரி மகரிஷியும்
26. கன்பூசியஸ்ஸீம் வேதாத்திரி மகரிஷியும்
27. பெஞ்சமின் பிராங்களினும் வேதாத்திரி மகரிஷியும்
28. ரூஸ்வெல்டும் வேதாத்திரி மகரிஷியும்
29. வேட்ஸ்வொர்த்தும் வேதாத்திரி மகரிஷியும்
30. மில்டனும் வேதாத்திரி மகரிஷியும்

Youtube channel Name – vethathiriam Banukumar

Face book group வேதாத்திரியத்தில் கலந்த நதிகள்